முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 388/2017

தேதி : 01–03–2024

(வா.சா.1) – பரமேஸ்வரி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2,3,6,8,9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை 2,3,6,8, 9 பிரதிவாதிகள் தரப்பு:

என் தாத்தாவிற்கு என் அப்பாவும், 3 அத்தைகளும் பிள்ளைகள். முதல் அத்தை பெயர் தெரியவில்லை, அவரை உள்ளூரிலே திருமணம் செய்து கொடுத்துள்ளார். 2 வது அத்தை பெயர் ஞாபகமில்லை, அவரை கே.சி.பட்டியில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். 3 வது அத்தை பெயர் தெரியாது. அவரையும் உள்ளூரிலேதான் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். 3 அத்தைகளின் வாரிசு விபரங்கள் எனக்கு தெரியாது. என்னுடைய தாத்தா எந்த வருடம் இறந்தார் என்று தெரியாது. நான் பிறப்பதற்கு முன்பே அவர் இறந்துவிட்டார். பூர்வீகமாக 4 சொத்துக்கள் இருந்தததது, அவற்றில் 3 சொத்துககளை விற்றுவிட்டார்கள். ஆத்துக்காட்டில் உள்ள சொத்தையும், மங்களங்காட்டில் சொத்தையும் விற்றுவிட்டார்கள். மலங்காட்டில் உள்ள சொத்தையும் விற்றுவிட்டார்கள். தாவா சொத்தை மட்டும்தான் விற்பனை செய்யப்படாமல் உள்ளது. ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட 3 சொத்துக்களை எப்போது விற்பனை செய்தார்கள் என்று தெரியாது. மலங்காடில் உள்ள சொத்துக்கள் 2 ஏக்கர் இருக்கும். அதில் விவசாயம் எதுவும் இல்லை. ஆத்துக்காடு சொத்து 70 செண்ட். அதில் காபி பயிர் செய்வார்கள். மங்களங்காடு சொத்து 21 செண்ட் ஆகும். அதிலும் காபி பயிர்

செய்வார்கள். அந்த சொத்துக்களை தற்போது யார் வைத்துள்ளார்கள் என்பது பற்றி தெரியாது. நான் அந்த சொத்துக்களுக்கு போனதில்லை. நான் திண்டுக்கல்லில் இருப்பதால் எந்த சொத்திற்கும் போனதில்லை. தாவா சொத்திற்கு ஆதியில் இருந்தே என் அப்பா பெயரில்தான் பட்டா உள்ளது. என் தாத்தா பெயரில் பட்டா இருந்தது. அந்த பட்டா அப்பா பெயரில் மாறியது. என் தாத்தா பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்யவில்லை. என் தாத்தா பெயரில் பட்டா இருந்ததாக வருவாய் துறை அதிகாரிகளிடம் சான்று பெற்று தாக்கல் செய்யவில்லை. என் தாத்தா பயெரில் இருந்து என் அப்பா பெயர் பட்டா மாறியதற்காக உத்தரவு நகல் எதுவும் தாக்கல் செய்யவில்லை. (கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.01.22 17:12:30 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.